**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

**OS.115/2022**

19.09.2025

**PW - 1**

**வா.சா.1. சசிகுமார், த/பெ. முத்து அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் டிப்ளமோ ஏசி மற்றும் பிரிட்ஜ் தொழில்நுட்ப படிப்பு படித்துள்ளேன். நான் டிப்ளமோ படித்துள்ளேன் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் - சரிதான். 1ம் பிரதிவாதி என் மனைவி. என் மனைவிக்கும் எனக்கும் திருவாரூர் சார்பு நீதிமன்றத்தில் விவாகரத்து வழக்கு நடந்து வந்து உத்தரவிற்காக 07.10.2025 ம் தேதி போடப்பட்டுள்ளது என்றால் - சரிதான். அந்த வழக்கு எண். HMOP. 128/2022 ஆகும். அதேபோல திருவாரூர் கூடுதல் மகிளா நீதித்துறை நடுவரிடம் DVC.7/2023 என்ற வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் - சரிதான். இந்த வழக்கு சொத்தில் என் மனைவி வசிப்பதற்கான உரிமையை DVC.7/2023 கேட்டுள்ளார் என்றால் - சரிதான். வழக்கில் சொல்லியுள்ள சொத்தை நான்தான் வாங்கினேன் என்பதற்கு ஆவணம் உள்ளதா என்றால் - பத்திரம் என் மனைவி பெயரில் உள்ளது. வெளிநாட்டில் இருந்து நான் அனுப்பிய பணத்தை கொண்டு என் மனைவி பெயரில் வாங்கினார். என் மனைவிக்கு மேற்படி சொத்தை வாங்குவதற்கு பணத்தை நான் அனுப்பினேன் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் - சாட்சி தாக்கல் செய்துள்ளதாக சொல்கிறார். என் மனைவிக்கு, இந்த சொத்து வாங்கிய தேதிக்கு முன்னரோ பின்னரோ பணம் அனுப்பினேன் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் - இல்லை. 29.10.2009 ல் என் மனைவி மேற்படி சொத்தை கிரயம் பெறும்போது நான் எந்த பணமும் அனுப்பவில்லை என்றாலும் வழக்கு சொத்திற்கும் எனக்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் - சரியல்ல. என் மனைவியின் தந்தையார் எங்கு வேலை செய்தார் என்றால் - வேதாரண்யம் வன இலாக்காவில் வேலை பார்த்தார். அவர் கொடுத்த பணத்தை வைத்தும், என் மனைவியின் நகைகளை விற்றும் ரூ.3 இலட்சத்திற்கு சொத்து வாங்கப்பட்டது என்றால் - சரியல்ல. எனக்கு 2 பிள்ளைகள், அதில் மகன் 12ம் வகுப்பு

படித்து வருகிறார். மகள் 9 ம் வகுப்பு படித்து வருகிறார். இருவரும் எனது மனைவியின் பராமரிப்பில் தான் உள்ளார்கள். அவர்களை நான் அடித்து கொடுமைப்படுத்தி விரட்டிவிட்டேன் என்றும் அவர்கள் உயிருக்கு பயந்து அவரது தகப்பனார் வீட்டோடு சென்றுவிட்டார் என்றால் - சரியல்ல. அவராகதான் வீட்டைவிட்டு சென்றார். வழக்கு சொத்திற்கு ஆசைப்பட்டு நான் என் மனைவி மற்றும் பிள்ளைகளை அடித்து விரட்டிவிட்டேன் என்றால் - சரியல்ல. DVC.7/2023 வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக தான் இந்த தாவா வழக்கு போட்டுள்ளேன் என்றால் - சரியல்ல. என் மனைவி வேறொருவருடன் தொடர்பு வைத்துள்ளதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் - இல்லை. என் மனைவியை வீட்டிற்குள் நுழையக்கூடாது என்று நான் வழக்கு தாக்கல் செய்யமுடியாது என்றால் - சரியல்ல. தாவா சொத்து என் மனைவிக்குரியது என்றாலும் அபகரிக்க இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் - சரியல்ல. வழக்கு சொத்து என் வசம் தான் உள்ளது. தாவா சொத்து என் மனைவி பெயரில் உள்ளது அவர்தான் வங்கியில் கடன் பெற்றுள்ளார் என்றால் - ஜாயிண்டாக வாங்கியுள்ளோம். தாவா சொத்தின் பத்திர உரிமையாளர் மற்றும் பட்டா, சிட்டா, வீட்டு வரி அனைத்தும் என் மனைவி பெயரில்தான் உள்ளது என்றால் - சரிதான். தாவா சொத்தை நான் அபகரித்துக்கொண்டு சட்ட முரணாக ஆக்கிரமித்துள்ளேன் என்றால் - சரியல்ல. 26.05.2022 ம் தேதியன்று சட்ட விரோதமாக எனது சொத்தை என் மனைவி அபகரிக்க முயன்றார் என்பதற்கு ஆவணம் எதையும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் - இல்லை. வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 26.05.2022 ல் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் - இல்லை. 26.08.2022 ல் என் மனைவி எந்த சட்டவிரோத செயலிலும் ஈடுபடவில்லை என்றால் - சரியல்ல. குடும்ப வன்முறை சட்டத்திலிருந்து தப்பிக்க வேண்டும் என்பதற்காக தான் மனைவி பெயரில் உள்ள சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காவும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் - சரியல்ல. தாவா சொத்து ஆர்.சி.சி. வீடு. எனது மனைவிக்கு திருமணத்தின்போது செய்யப்பட்ட சீர்வரிசை பொருட்கள் அனைத்தும் என் வசம் தான் உள்ளது என்றால் - சரியல்ல. நான் விருப்பப்பட்டு திருமணம் செய்துக்கொண்டதால் சீர்வரிசை செய்யவில்லை. எங்களது திருமணம் கோடியக்கரையில் நடந்தது. திருமண செலவுகள் 1ம் எதிர்மனுதாரரின் தகப்பனார் செய்தார்

என்றால் - சரியல்ல. நான் திருமணத்திற்காக கடன் வாங்கியதற்கான ஆவணம் எதையும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் - இல்லை. என் மனைவியை தாவா சொத்திற்குள் நுழைய தடை விதிக்க தாக்கல் செய்ய முடியாது என்றும் என் வழக்கை தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் - சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு சொத்து ஆவணங்களை தவிர மற்ற ஆவணங்கள் அனைத்தும் இந்த வழக்கிற்கு பொருத்தமற்றது என்றால் - சரியல்ல.

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

ஒம்/- எஸ்- முத்துராமன்,
சார்பு நீதிபதி,
மன்னார்குடி.